விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 163 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 17 சனிக்கிழமை (31.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## ஒதுக்கப்பட்ட நிதி மீளச் செல்லாமல் வினைத்திறனாக பயன்படுத்துக

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி மீளத் திரும்பச் செல்லாமல் வினைத்திறனாகப் பயன்படுத்துக என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், யாழ்ப்பாண மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உரையாற்

15ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற காலநிலையால் 21 மாவட்டங்கள் பாதிப்பு

- 3 பேர் உயிரிழப்பு
- 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு



(கொழும்பு)

தென்பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலையால் 3 பேர் உயிரிழந்ததுடன் 21 மாவட்டங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு

14ஆம் பக்கம் பார்க்க


## தமிழரசுக் கட்சி - முன்னணி சந்திப்பு

# முழுமையான இணக்கமின்றி கலந்துரையாடல் நிறைவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான கலந்துரையாடல் முழுமையான இணக்கப்பாடின்றி நிறைவடைந்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்வரும் 8ஆம் திகதி அமைச்சர் பிமல் யாழ்.வருகை

### அரச - தனியார் போக்குவரத்து பிரச்சினை தொடர்பில் ஆராயப்படும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 8ஆம் திகதி போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் பேருந்து சங்கத்துக்

15ஆம் பக்கம் பார்க்க

## கிருமித் தொற்று

### யாழில் 3 மாதங்களேயான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

கிருமித் தொற்றுக் காரணமாக யாழ்ப்பாணம் சங்கானையில் பிறந்து 3 மாதங்களேயான பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இதில் சங்கானை - நிற்சாமம் பகுதியைச் சேர்ந்த திகாசன் அபிசிறி என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வழங்குக

### யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்மொழிவு



15ஆம் பக்கம் பார்க்க

37 ஆண்டுகளின் பின்னர்

## தமிழகத்திலிருந்து யாழ்.திரும்பிய 75 வயது நபர் சிஐடியால் கைது

(யாழ்ப்பாணம்)

சுமார் 37 வருடங்களின் பின்னர் தமிழகத்தின் அகதி முகாமிலிருந்து யாழ்.திரும்பிய 75 வயது நபர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் (29) கைது செய்யப்பட்டு நேற்று குற்றப் புலனாய்வுத் துறையினரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில், நாடு திரும்புவதற்குத் தேவையான சகல ஆவணங்களும் அவரிடம் இருந்துள்ளது.

அதேவேளை, சர்வதேச

14ஆம் பக்கம் பார்க்க

## இளம் குடும்பஸ்தர் கரவெட்டியில் சடலமாக மீட்பு

(கரணவாய்)

கரவெட்டியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வரணியைச் சொந்த இடமாகவும் கரவெட்டி மத்தி பகுதியில் திருமணம் செய்து

15ஆம் பக்கம் பார்க்க

## ஒட்டுசுட்டானில் துரத்தி கொட்டிய தேனீக்கள்

### மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 63 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய பாடசாலை வளாகத்திற்குள் நேற்றுக் காலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தேனீக்கள் துரத்திக் கொட்டியதில் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 63 நபர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின்

### வருடாந்த பொங்கல் தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 09.06.2025 திங்கள் அன்று நடைபெறவுள்ளது.


இவ்விழா தொடர்பிலான ஒழுங்கமைப்பு முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உம

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 27 . 03 . 1942

இறைவன் அடியில் 11 . 06 . 2024

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லையா கார்த்திகேசு

திதி - வைகாசி பூர்வபக்க பஞ்சமி 31.05.2025

ஓடி மறைந்தது ஓராண்டு
வாடி நிற்கிறோம் உமை இழந்து
நாடிச் சென்றீர் இறைபதமே
கூடி வேண்டுகிறோம் நீர் சாந்தியடைய
காலச் சக்கரமோ சுழன்று போனது
நாளும் பொழுதும் உம் நினைவே சூழ்ந்தது
பாலை நிலமாய் மனதும் வரண்டது
கோலம் இழந்து சோகம் நிலைத்தது
இறைவன் பதமே என்றும் நீர்
நிறைவாய் குருவாய் அமர்ந்திருக்க
முழுதாய் அவரை வேண்டுகின்றோம்
மனதில் என்றும் நிறைந்திருப்பீர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் (C-3081)

# மும்பை வெற்றி



குஜராத்திற்கு எதிரான போட்டியில் மும்பை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்களைக் குவித்தது.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் முடிவில் 208 ஓட்டங்கள் குவித்து 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக ரோகித் சர்மா தெரிவானார். (ம-4,7)


## உடனடி வேலைவாய்ப்பு

1. கணினி திருத்துநர் Computer Technician - ஆண்/பெண்
2. சிசிரிவி பொருத்துநர் CCTV Technician - ஆண்
3. களஞ்சியப் பொறுப்பாளர் Store Keeper - ஆண்/பெண்
4. பயிலுநர்கள் Trainees - ஆண்/பெண்

வயது 18 – 24
துறைசார் அனுபவம் முன்னுரிமையாகும்

GUNA BEST PC
379, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் 077 908 6737 (4420)

## தென்னந் தோட்டத்தில் வேலை செய்ய ஆள் தேவை

பளையில் உள்ள தென்னந்தோட்டத்தில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு ஆள் தேவை.
தனிப்பட்டவர்கள் அல்லது கணவன் மனைவி என்ற சிறு குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு 075 719 0110

## பெண் உதவியாளர் தேவை

பெண் நோயாளி ஒருவரை வீட்டில் இருந்து கவனிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு :
071 847 5539

## பணியாளர் தேவை

விடத்தல்பளை, கச்சாய் வீதியில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அக்ரோ நிறுவனத்தில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பண்ணையில் வேலை செய்த அனுபவமுள்ள பணியாளர் தேவை. (C-3084)

077 076 7114


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 29 - 08 - 1943

ஆண்டவன் அடியில் 28 - 05 - 2025

## திருமதி இரத்தினம் நாகேஸ்வரி

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நாகேஸ்வரி அவர்கள் 28.05.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - தங்கமுத்து தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் இரத்தினம்(முன்னைநாள் சிரேஷ்ட உத்தியோகத்தர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரமசிவம் அவர்களின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற நகுலாம்பிகை (ஜேர்மனி), நவசுதன்(அவுஸ்திரேலியா), வனிதாம்பிகை (பிரான்ஸ்), ஜெகதாம்பிகை(பிரான்ஸ்), வாலாம்பிகை (முன்னாள் உத்தியோகத்தர் - IT Park), தனதாம்பிகை(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீவரதராசா (ஜேர்மனி), கௌசலா (அவுஸ்திரேலியா), லோகநாதன் (பிரான்ஸ்), சிவநேசன் (பிரான்ஸ்), தர்மசங்கரன்(மாநகர சபை, யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜெய்சாந், லோகிசாந், கபிலாஷ் (ஜேர்மனி), சாருயன், சரணன்(அவுஸ்திரேலியா), ராகவி, சுபாங்கி, சாரங்கி (பிரான்ஸ்), சஜிந்(பிரான்ஸ்), வைஷ்சகி, கேசிகன் மற்றும் சுஜானன், ஷாய்னன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இராச வீதி, நீர்வேலி வடக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அராலி கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (4421)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 28 - 01 - 1977

அம்பாள் அடியில் 30 - 05 - 2025

## கவிதா ஜெயக்குமார்

(சங்கீத ஆசிரியை – கோண்டாவில் இந்துக் கல்லூரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கவிதா ஜெயக்குமார் அவர்கள் நேற்று 30.05.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் நாகராஜா - கமலாதேவி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் பாலகிருஸ்ணன் - கெங்கேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் பாலகிருஸ்ணன் ஜெயக்குமார் அவர்களின் அன்பு மனைவியும் டர்ஷான்(8B யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), அக்ஷிதா(5F யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா(சுவிஸ்), கேமமாலினி(இலங்கை), சுஜேந்திரன், திருக்குமரன்(சவுதி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துஸ்யந்தன்(சுவிஸ்), சுரேஸ்குமார் (இ.போ.ச), குகரஞ்சினி, கௌசிகா, கிருஸ்ணவேணி, கோகுலவாணி, சாந்தகுமார், றோகினி, ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பத்மநாதன், தயாநாதன், ஞானகுமார், பாலேந்திரா, சிவகுமார் ஆகியோரின் பெறாமகளும் இலங்கேஸ்வரி அவர்களின் மருமகளும் சிந்து, சுகன்ஜா, வெங்கடேஸ், துஜானா, பவித்திரா, பதுஷா, நிதுஷன், பிரியங்கா, பிரசாந், பிரதிக்கா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் கஜன், அபிதா, ஜேயன் ஆகியோரின் மச்சாளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.06.2025 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 11.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு. (4422)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை செல்லவுள்ள முக்கிய புள்ளிகள்

## விசாரணைகள் தீவிரம்

(கொழும்பு)

**20 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டமை குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.**



சில ஊழல்கள் பத்துப் பதினைந்து வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்றவை முன்னைய பல அரசாங்கங்கள் அவற்றை அப்படியே மூடி மறைத்து விட்டன என தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவற்றை மீண்டும் விசாரணை செய்ய ஆரம்பித்துள்ளது.

சிஐடியினரை விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

சிஐடியினர் விசாரணை செய்து வருகின்ற இந்த ஊழல்மோசடிகள் குறித்து என்னால் மேலும் கருத்து கூறமுடியாது என தெரிவித்துள்ள அமைச்சர் 20 பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன. இவர்களில் சிலர் அமைச்சர்களாக பதவி வகித்தவர்கள் என தெரிவித்துள்ளார்.

சில அதிகாரிகளும் உள்ளனர் அவர்களின் பெயர்களை வெளியிட முடியாது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சில குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள சீன முதலீட்டாளர்கள் ஆர்வம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையான வேலைத்திட்டத்தைக் கருத்திற் கொண்டு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீன முதலீட்டாளர்கள் கவனம் செலுத்தியுள்ளதாக சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது "இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயற்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர், 100 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். (நி-8)

## சீரற்ற வானிலை நீடிப்பு

# மின்தடை ஏற்பட்டால் 1987 ஐ அழைக்கவும்!

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக பல பகுதிகளில் மின்சாரத் தடைகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் சீரற்ற வானிலை நீடிப்பதால் மின்சாரத் தடை அதிகரித்துள்ளது.

உங்களது பகுதிகளில் மின்சாரத் தடை ஏற்பட்டால் CEBCare மொபைல் செயலி மூலமாகவோ அல்லது 1987 என்ற அவரச தொலைபேசி இலக்கத்திற்கோ அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறு இலங்கை மின்சார சபை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி-8)

# பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை கடலில் மூழ்கடிக்க நடவடிக்கை

## கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை கடலில் மூழ்கடிக்கும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் 123 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு மயிலிட்டித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த படகுகளை அழிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில் கடந்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடியதற்கமைவாக, எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அத்துமீறிய சுமார் 123 படகுகள் மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து நிற்கிறது.

அவை பாவனைக்கு உதவாத வகையில் இருப்பதுடன் எமது மீனவர்கள் பயன்படுத்தாத ரோலர் படகுகளே அதிகமாக இருக்கிறது.

எனவே அவற்றில் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய பாகங்களை அப்புறப்படுத்தி விட்டு அவை கடலில் மூழ்கடிக்கப்படும்.

இதனால் கடல் மீன் வளம் அதிகரிப்பதுடன் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களையும் கணிசமாக்க குறைத்துக் கொள்ளலாம் என சுட்டிக்காட்டினார். (க-நி)



# மணல் தட்டுப்பாட்டிற்கு மணல் மாப்பியாக்களே காரணம்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இளங்குமரன் எம்.பி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

மணல் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளதற்கு மண் மாபியாக்களே பிரதான காரணம் என்று பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கூறியுள்ளார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவர், அரச வீட்டுத் திட்டம் பூர்த்தியடையாமை தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் மணல் ஊழல் மிகத் தாராளமாக நடை பெறுகின்றது. மணலை அகழ்வு செய்வதற்கு அனுமதியைப் பெற்று அதனை வேறு நபர்களுக்கு விற்பனை செய்யும் கொடுமை தாராளமாக நடக்கிறது. மணல் தட்டுப்பாட்டிற்கும் மணல் விலையேற்றத்திற்கும் இதுவே மூல காரணம்.

இவ்விடயம் தொடர்பில் அதி காரிகள், பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் அது எமது மக்களின் வளத்தை சூறையாடுவதாய் அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/01

## JAFFNA MUNICIPAL COUNCIL, NORTHERN PROVINCE, JAFFNA

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the **Municipal Commissioner, Jaffna Municipal Council, Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council Fund
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Highway Construction ,building construction for grade mentioned in the table below
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987." (package 01- package 04)**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in **GROUP B** in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-05-31 To 2025-06-16** during **09:00 hrs and 14:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-2217691/021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-05-31 To 2025-06-16 |
| Pre-Bid Conference | At 11.00 AM on 2025-06-06 |
| Closing and Opening of Bids | At 10.30 AM on 2025-06-17 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/CF/2025/1/01 | Improvements to Nedunkulam Pillaiyar Kovil Road, Improvements to Old park 1st lane, Renovation of Rajenthira Road Drainage (Culvert) & Construction of Cross Drainage Near the Thodarmaadi (Beach Road,1 st Lane link road) | 7.47 | 84 | C7 or Above (Highway Construction) | 3,500.00 | 111,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/1/02 | Improvements to Jinna road, Improvements to Seeniar Lane (Near the Kaladdy Amman Kovil), Improvements to Point pedro Road 3rd lane, Improvements to Rakka Lane (Near the Maruthadykulam) | 6.9 | 63 | C7 or Above (Highway Construction) | 3,500 .00 | 102,500.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/1/03 | Construction of Murukamoorthy Road Culvert (Near the Murukamoorthy Road and Periyathampiran Road Junction) , Improvements to Moothavinayarar veethy(CONSTRUCTION OF MOOTHTHAVINAYAGAR KOVIL ROAD AND AASEERVATHAPPAR ROAD JUNCTION CULVERT WORK) , Improvements to Velappar Veethy | 7.28 | 84 | C7 or Above (Highway Construction) | 3,500.00 | 108,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/1/04 | Construction of Boundary Wall at Kakkaitivu Recycling Center Stage II, Improvements to Araly road | 5.59 | 84 | C7 or Above (Highway & Building Construction) | 3,500.00 | 83,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/1/05 | Improvements to Sinnakadai Market | 4.04 | 84 | C8 or Above (Building) | 3,500.00 | 59,500.00 | 2025-09-01 | 49 Days |
| JMC/PMD/CF/2025/1/06 | Improvements to Idukaddu road | 4.75 | 63 | C8 or Above (Highway Construction) | 3,500.00 | 71,000.00 | 2025-09-01 | 49 Days |

**Chairman**
**Regional Procurement Committee,**
**Jaffna Municipal Council,**
**Point pedro Road, Nallur, Jaffna.**

(C-3083)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமையான ...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் தமிழத் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் இலங்கைத் தமிழரசு கட்சியின் சார்பில் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் செல்வராஜா கஜேந்திரனும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பாக குறித்த சந்திப்பு நடைபெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எம்.ஏ சுமந்திரன்,

ஒவ்வொரு சபையிலும் எந்தக் கட்சிகளுக்கு அதிகூடிய உறப்பினர்கள் இருக்கிறார்களோ அந்தக் கட்சி அந்த சபையிலே நிர்வாகங்களை அமைப்பதற்கு மற்ற கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்.

இந்த பொதுவான கோட்பாட்டினை நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரோடு இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பேசியுள்ளோம். பொதுவாக அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

அவர்கள் இன்னும் 4 சபைகளிலே நல்லெண்ண சமிக்ஞையாக தங்களுக்கு தவிசாளர் பதவியைக் கொடுக்க முடியுமா? எனக் கேட்டிருந்தார்கள்.

சிலவேளைகளில் அப்படியானதொரு சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

வடக்கு, கிழக்கிலுள்ள சபைகளிலே நிர்வாகம் அமைக்கப்படும் போது எங்களுடைய நிலைப்பாடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடைய நிலைப்பாடும் ஏறத்தாழ ஒரே நிலைப்பாடாக இருப்பதால் அதனடிப்படையிலேயேதான் சபைகள் அமைக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இதை ஒரு இணக்கப்பாடாக அவர்கள் அறிவிக்க விரும்பவில்லை. ஆனால் நாம் இருவரும் சபைகள் அமைக்கும் வ ிடயத்தில் ஒரே நிலைப்பாட்டில் இணங்கி இருக்கிறோம் என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

தமிழத் தேசியத்தை பேசி வாக்குப் பெற்ற தரப்புகள் கொள்கை ரீதியாக ஒரு புதிய நிலைப்பாட்டுக்கு வந்து நாங்கள் ஒரு கூட்டாக எதிர்காலத்திலே செயற்பட இருக்கிறோம்.

எவரும் அந்தக் கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வரத் தயாரில்லை.

வெறுமனே இந்த சபைகளிலேயே பெரும்பான்மையைக்காட்டி சபைகளை கைப்பற்றுவது மட்டும்தான் அவர்களது நோக்கமாக இருந்தால், அதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கப் போவதில்லை. கொள்கையை விட்டு வெறுமனே ஆட்சியமைப்பதற்கும் பதவியைப் பெறுவதற்கும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டிய தேவையில்லை.

நாங்கள் ஒரு தலைப்பட்சமாகவே முடிவெடுத்துள்ளோம். நாங்கள் பெரும்பான்மையை பெறாதவிடத்து முதலிடத்திலுள்ள கடசிக்கு தவிசாளர் பதவியைப் பெறுவதற்கும் இரண்டாம் இடத்திலுள்ள தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிக்கு உப தவிசாளர் பதவியை பெறுவதற்கு எங்களுடைய ஆதரவு இருக்கும். துரதிர்ஷ்டவசமாக நாம் இன்று ஒரு கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வர முடியவில்லை என்றார். (ம-4,7,33)

# பாடசாலை நிகழ்வுகளில்
# அரசியல்வாதிகளின் பிரசன்னம் அதிகரிப்பு
## தடை செய்யுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**அரச பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் பங்கேற்பதனை தடை செய்யும் சுற்று நிருபத்தை மீளவும் அமுல்படுத்த வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரியவிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் பங்கேற்பது அதிகரித்துள்ளதாக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு அரசியல்வாதிகள் பங்கேற்பதனால் பெற்றோருக்கு கூடுதல் செலவு ஏற்படுவதுடன் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-8)

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 295.17 ரூபாவாகவும், 303.68 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது 295.30 ரூபாவாகவும், 303.79 ரூபாவாகவும் உள்ளது. எனினும், வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது.

அதே நேரத்தில் வளைகுடா நாணயங்களுக்கு எதிராக அது உயர்ந்துள்ளது. (நி)

# ஐந்து ஆண்டுகளுக்குள் உலக வெப்பநிலை உயரும்
## வானிலை ஆராய்ச்சி அமைப்பு தகவல்

(வோஷிங்டன்)

2025 - 2029 இற்கும் இடையேயான ஐந்து ஆண்டுகளுக்குள் உலகின் சராசரி வெப்பநிலை புதிய உச்சம் தொட வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை உலக வானிலை ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது உலக நாடுகள் பருவநிலை மாற்றத்தை எதிர்கொண்டு வரும் நிலையில் பருவகாலங்களில் ஏற்படும் மாற்றங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இதன்படி, 2025 - 2029 இற்கு இடையேயான ஐந்து ஆண்டுகளுக்குள் ஆண்டு சராசரி வெப்பநிலை புதிய உச்சம் தொடுவதற்கு 80 சதவீதம் வாய்ப்புள்ளதாக குறித்த அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த புதிய உச்சமானது கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு பருவநிலை மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட சர்வதேச வெப்பநிலை வரம்பை மீறியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, நடப்பு பத்தாண்டு காலம் முடிவதற்குள் உலக வெப்பநிலை ஆபத்தான அளவில் இரண்டு டிகிரி செல்சியஸ் வரை உயரலாம் என்றும், அதனால் ஆர்க்டிக் பனிப்பிரதேசம் வெப்பமடைந்து உருகுவதுடன் கடல் நீர் மட்டமும் உயரும் வாய்ப்புள்ளதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# படகில் தத்தளித்த மீனவர்களை மீட்ட விமானப் படையினர்



மீனவர்கள் மூவரும் வெற்றிகரமாக மீட்கப்பட்டதாக இலங்கை விமானப்படை தெரிவித்தது.

(கொழும்பு)

கடல் கொந்தளிப்பால் பலப்பிட்டி கடற்கரையில் டிங்கி படகில் சிக்கித் தவித்த மூன்று மீனவர்கள் இலங்கை விமானப்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணிக்காக இரத்மலானாவில் உள்ள விமானப்படை தளத்திலிருந்து பெல் 412 ஹெலிகொப்டர் அனுப்பப்பட்டதாக விமானப்படை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு செயலாளரின் உத்தரவின் பேரில் இந்த மீட்புப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது கடுமையான பாதகமான வானிலையை சந்தித்து வருகிறது.

இதனால், கடல் கொந்தளிப்பு மற்றும் பலத்த காற்று வீசும் என்பதால் கடற்படை மற்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

31.05.2025
வைகாசி 17, சனிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 1.30 மணிவரை

பூசம் பின்னிரவு 2.08 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம்

வளவன்




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




பயணங்களால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.




குடும்பத்தினர் ஒத்துழைப்பு கிடைக்கும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை எளிதில் முடிக்க நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், நினைத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




தன்னம்பிக்கையோடு பணியாற்றி முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுறு சுறுப்போடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாய் இருக்கும் நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் வழியில் இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




குடும்பப் பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ரோக பயமுண்டு.




பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

ஆயுளை நீட்டிக்க வேண்டுமென்றால் உணவைக் குறைத்துக் கொள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரச வீட்டுத்திட்டத்தில்

# முழுமை பெறாமல் 3880 வீடுகள்

### தேசிய வீடமைப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டு



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் 3880 வீடுகள் பூர்த்தியடையாமல் இருப்பதாகத் தேசிய வீடமைப்பு அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.**

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் அரச வீட்டுத் திட்டம் தொடர்பான தெளிவுபடுத்தலிலேயே தேசிய வீடமைப்பு அதிகாரசபை அதிகாரியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது அரசாங்கத்தினால் வீட்டுத்திட்டத்திற்கான நிதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை நிதி கிடைத்தவுடன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (க-றி)

# கனடா கல்விக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

இலங்கை - கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கனடா கல்விக் கண்காட்சி நேற்று யாழ்ப்பாணம் வலம்புரி விடுதியில் ஆரம்பமானது.

கனடா- இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குலா செல்லத்துரை மற்றும் குறித்த சம்மேளனத்தின் இலங்கைக்கான தலைவர் பியந்த சந்திரசேகர மற்றும் பலதரப்பட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்புடன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கனடா கல்விக் கண்காட்சி மற்றும் யாழ்ப்பாணம் முதலீட்டு வர்த்தக மன்றம் 2025 என்ற குறித்த கண்காட்சி வடக்கு- கிழக்கின் இளைஞர்களை மேம்படுத்தல் - எதிர்காலத்தை கட்டியெழுப்பல் என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

இன்றும் தொடரும் இந்தக் கண்காட்சியானது இலங்கை வர்த்தக சபை, இலங்கை- கனடா வணிகமன்றம், கனடா உயர் ஸ்தானிகராலயம், கனடா- இலங்கை வணிக மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர். (றி-33)

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுபட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளைத் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வா. வள்ளி வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (றி-3-8)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலையின் விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியில் கி.சதீஷ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உதவி கல்விப் பணிப்பாளர் இ.ஜெயகரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.ஜிவிந்தன், யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆசிரியர் மூ. பாலேந்திரன், நெல்லியடி செங்கடகல நிதி நிறுவன முகாமையாளர். சி ரஞ்சித், யா / ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை திருமதி. சி. சுவர்ணாதேவி, யா / ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை திருமதி. ச.தர்மாலினி, யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை ஆசிரியை. திருமதி. செ. கமலாதேவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (றி-3-8)




# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 250 | 450 | 330 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 300 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 400 | 400 |
| தக்காளி | 700 | 700 | 800 | 550 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 280 | 240 |
| கோவா | 450 | 550 | 550 | 350 | 500 |
| கரட் | 650 | 800 | 800 | 650 | 800 |
| பூசணி | 160 | 200 | 150 | 160 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 220 | 250 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 250 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 600 | 800 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 150 | 120 |
| லீக்ஸ் | 350 | 360 | 350 | 250 | 350 |
| பீற்றூட் | 550 | 400 | 450 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 600 | 400 | 550 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 1000 | 800 | 1400 |
| போஞ்சி | 400 | 500 | 550 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 200 | -- | 350 |
| கீரை – 1 பிடி | 120 | 120-160 | 150 | 80 | 150 |
| தேசிக்காய் | 400 | 250 | 400 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 150 | 100-200 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| [illegible] | -- | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவை பெறச் செல்வோர் அலைக்கழிக்கப்படும் அவல நிலை

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சிறீதரன் எம்.பி காட்டம்



**(யாழ்ப்பாணம்)**

**அரச திணைக்களங்களுக்கு சேவை நாடிச் செல்பவர்களை நாயை விடக் கேவலமாக நடத்தும் நிலை இன்றும் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் காட்டமாகத் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அவர், ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண ரீதியிலான ஆசிரிய இடமாற்றங்களை மனச்சாட்சியுடன் மேற்கொள்ள வேண்டும்.

இடமாற்றங்களை மேற்கொள்ளும் போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இதை விடுத்து அவர்களை மதிக்கமால் அவமதிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல.

அரச திணைக்களங்களில் ஆசிரியர்களை மாத்திரமல்ல சேவை நாடிவரும் பொதுமக்களையும் நாயை விட மோசமாக நடத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நிலை மாற வேண்டும்.

அனைவரையும் மனிதராய் மதிக்கும் பண்பு இருந்தாலே போதும் என அவர் சுட்டிக்காட்டினார். (க-றி)

# ஈஸ்ரர் தின விசாரணையில் திருப்தி

## பேராயர் மல்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து தற்போதைய அரசாங்கம் நடத்திவரும் விசாரணைக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட பேராயர் கர்தினால் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2019ஆம் திகதி நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்கை மூடிமறைப்பதற்கு எதிராக நாங்கள் உண்மையையும் நீதியையும் கோருகிறோம்.

மேலும் உண்மையான குற்றவாளிகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் வெளிப்படும் வரை பாதிக்கப்பட்டவர்களும் நீதிக்காக காத்திருக்கிறார்கள்.

நாடு பொருளாதார ரீதியாகவும் பல வழிகளிலும் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாக கூறிய கர்தினால், இன்று மக்களிடையே ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை உணர்வு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒரு பொறுப்பான அரசியல் வர்க்கமும் மக்கள் நம்பும் ஒரு ஜனாதிபதியும் இருப்பதாகவும், மக்களில் பெரும்பாலோர் ஜனாதிபதியை ஆதரிப்பதாகவும், திருச்சபை அரசாங்கத்துடன் நல்ல உறவைப் பேணுவதாகவும், ஒத்துழைப்புக்கான நல்ல வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (நி-8)

# சீரற்ற வானிலையால் 485 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற வானிலையால் 485 குடும்பங்களைச் சேர்ந்த 1,757 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததை அடுத்து, நேற்று முன்தினம் மாலை முதல் பல பகுதிகளில் பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீசி வருகின்றன. அதன்படி, மழை மற்றும் காற்று நிலைமைகளால் 9 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளதுடன் 3 வீடுகள் முழுமையாகவும், 365 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மண்சரிவுகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி காலி, களுத்துறை, கேகாலை மற்றும் கண்டி மாவட்டங்களில் வசிப்பவர்கள் மண்சரிவுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மையம் அறிவுறுத்தியுள்ளது. (நி)

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலையா? ஹரியிடம் விஜயதாச கேள்வி



(கொழும்பு)

கனடாவில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின், அதன் விளைவாக ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனையும் "இனப்படுகொலை" என்று வகைப்படுத்துவீர்களா? என கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியிடம் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் குறித்து விஜயதாச ராஜபக்சவினால் ஹரி ஆனந்தசங்கரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, "கடந்த அரசாங்கத்தில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த நான், தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டேன்.


இலங்கையில் சுபீட்சத்தையும், புரிந்துணர்வையும் கட்டியெழுப்பும் நோக்குடனேயே உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன். முதலாவதாக கனடாவின் அரசியலில் உச்சத்தை எட்டியிருக்கும் உங்களுக்கு எனது வாழ்த்தினைக் கூறுகின்றேன்.

இலங்கையில் சகல சமூகங்களினதும் மதிப்பைப் பெற்ற தமிழ் அரசியல்வாதியான வீ.ஆனந்தசங்கரியின் மகனான உங்களது அமைச்சு நியமனம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

அண்மைய காலங்களில் வெளியிடப்பட்டுள்ள சில கருத்துக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒரு முன்னுதாரணமாகக் காண்பிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகுந்த அதிருப்தி அடைகின்றேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் சுமார் 60,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், அவர்களில் சுமார் 27,000 இற்கும் மேற்பட்டோர் இராணுவத்தினராவர். அது மாத்திரமன்றி முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள், சமூகத்தலைவர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், கனடாவில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின், உயிரிழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனையும் "இனப்படுகொலை" என்று வகைப் படுத்துவீர்களா? இல்லை எனில், இலங்கை மீது அதனை ஒத்தவகையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தீவிர கரிசனைக்குரியதாகும்.



தற்போது இலங்கைக்கு தூரநோக்கு சிந்தனையும், கருணையும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சில வெளிநாட்டு தரப்புக்களின் சந்தர்ப்பவாத அரசியல் செயற்பாடுகள் உள்நாட்டு நிலவரத்தை மேலும் மோசமாக்குகின்றன.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் ஆகியோர் இந்த் துருவமயமாக்கலுக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர்.

அதற்குக் காரணம் தமிழ் சமூகத்தின் மீதான அக்கறை அல்ல. மாறாக அரசியல் ரீதியான நோக்கங்களும், தேர்தல் அடைவுகளுமே அதற்குக் காரணமாகும்" என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்குமாறு வலியுறுத்து!

## மறுத்தால் விளைவு விபரீதமாகும் என ரஷ்யாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



(ஜெனீவா)

**உக்ரைனில் 30 நாள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா வலியுறுத்தியது.**

ரஷ்யா - உக்ரைன் போர் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சிக்கிறார். இது தொடர்பாக சமீபத்தில், புடினுடன் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினார். இந்நிலையில், உக்ரைனில் 30 நாள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு, ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா வலியுறுத்தியது.

போர் நிறுத்த ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்தது. உக்ரைன் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால் ரஷ்யா தரப்பில் இதுவரை எந்தப் பதிலும் அளிக்க வில்லை.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்க துணைத் தூதர் ஜான் கெல்லி பேசியதாவது: உக்ரைனில் அமைதியை உருவாக்க ரஷ்யாவுடன் நாங்கள் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். இந்த மோதலுக்கு இராணுவத் தீர்வு முடிவு அல்ல.

அதே நேரத்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பை தொடர்ந்தால், அமெரிக்கா அமைதிப் பேச்சு வார்த்தைகளில் இருந்து பின்வாங்கிக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டியிருக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

## ஈரானை சீண்ட வேண்டாம்!
### நெதன்யாகுவை எச்சரித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

ஈரானை தாக்க வேண்டாம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகுவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்களை இஸ்ரேல் தாக்கும் என்று செய்திகள் வந்தன.

இதைத் தொடர்ந்து ஈரானுடனான பிரச்சினை தீர்க்கப்படும் தருவாயில் இருக்கும் நேரத்தில், ஈரானை தாக்குவது பொருத்தமற்றது என்று ட்ரம்ப் நெதன்யாகுவிடம் தெரிவித்தார்.

ஈரான்-அமெரிக்கா அணுசக்தி பேச்சு வார்த்தைகள் இறுதி கட்டத்தில் உள்ளன. ஆனால் யுரேனியம் செறிவூட்டல் தொடர்பான சர்ச்சை இன்னும் நீடிக்கிறது. ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கப் போவதில்லை என்று முன்னர் கூறியது. ஆனால் யுரேனியம் செறிவூட்டலைக் கைவிட மறுத்தது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஆபரேஷன் சிந்
### பாகிஸ்தான் பயன்படுத்திய ஆயு
## பதிலளிக்க சீனா ம

(பீஜிங்)

பஹல்காம் பகுதியில் நிகழ்ந்த பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் அதன் பின்விளைவாக இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையால், இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே கடுமையான மோதல் நிலை உருவானது.

பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து இந்த மோதல் நிலை குறைவடைந்தது. இருப்பினும், இந்த ஆபரேஷன் தற்காலிகமாகவே நிறுத்தப்பட்டுள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த சூழலில், மோதலின்போது பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவுக்கு எதிராக சீனாவிடம் இருந்து பெற்ற சில ஆயுதங்களை பயன்படுத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, பாகிஸ்தானின் இராணுவப் பயன்பாட்டில் இருந்ததாகக் கூறப்படும் சீனாவின் அதிநவீன ராக்கெட்டான PL-15E ஏவு கணை வெடிக்காமல் இந்திய இராணுவத்தின் வசம் கிடைத்ததாக செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக சீனாவின் பாதுகாப்புத் துறை செய்தி தொடர்பாளர் சாங் சியோகாங் அளித்த ஊடக சந்திப்பில், பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக சீன ஆயுதங்களைப் பயன்படுத்தியதா? என ஊடகவியலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த ஒப்பந்தம்; இஸ்ரேல் ஒப்புதல்!

(டெல் அவிவ்)

**ஹமாஸ் அமைப்புக்கு எதிராக நடக்கும் போரை நிறுத்துவது தொடர்பாக அமெரிக்கா வின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் கொண்டு வந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.**





கடந்த ஆண்டு ஒக் 7இல் மேற்கு ஆசிய நாடான இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்கு தல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்ட னர்.

இதனையடுத்து ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் வான்வழியாகவும், தரை வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளின் முயற்சியால் போர் நிறுத்தம் அமலானது. ஆனால், அதில் ஒப்பந்தப்படி விதிமுறைகள் பின்பற்றப் படவில்லை எனக்கூறி, மீண்டும் இஸ்ரேல் தாக்குதலைத் தொடங்கி உள்ளது. இதில், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், இந்த போரை நிறுத்துவது தொடர்பாக அமெரிக்க ஜனபதிபதி ட்ரம்ப்பின் மத்திய கிழக்கு நாடு களுக்கான சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கி உள்ளார். இதற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது என அந்நாட்டு பிரதமர் நெதன்யாகு அறிவித்து உள்ளதாக தகவல் வெளியாகி உள் ளது.

இதனிடையே, இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த ஆவணம் தங்களுக்கு கிடைத்து உள்ளதாகவும், அதனை ஆய்வு செய்து வருவதாகவும் ஹமாஸ் அமைப்பினர் தெரிவித் துள்ளனர். இந்த ஒப்பந்தத்தில் என்ன உள்ளது என்ற தக வல் அதிகாரப் பூர்வமாக வெளியாகவில்லை. (நி-8)

---

## ...தூர்
## ...யுதங்கள்;
## ...மறுப்பு

...ர் எழுப்பிய கேள்விக்கு ...வர் பதிலளிக்க மறுத்தார்.

அதே சமயம், இந்திய ...ராணுவம் கைப்பற்றிய ...ாகக் கூறப்படும் ஏவு...ணை குறித்து அவர் பதில...க்கும்போது, "நீங்கள் ...றிப்பிட்ட ஏவுகணை ஒரு ...ற்றுமதி உபகரணமா...ம். இது உள்நாட்டிலும், ...வளிநாட்டிலும் நடை...பற்ற பாதுகாப்பு கண்...ாட்சிகளில் பலமுறை ...ாட்சிக்கு வைக்கப்பட்டுள்...து" என தெரிவித்தார்.

சீனாவும் பாகிஸ்தானும் ...துகாப்புத் துறையில் ...ண்டகால கூட்டாண்...மையை கொண்டுள்ள நிலை...ல், இந்த விவகாரம் ...மலும் சர்வதேச கவன...தை ஈர்த்துள்ளது. (நி-8)

---

# பற்றி எரியும் காட்டுத்தீ
## கனடாவில் அவசர காலநிலை

(ஒட்டாவா)

கனடாவில் சஸ்காட்சிவான் மற்றும் மனிடோபா மாநிலங்களில் பற்றியெரிந்து வரும் காட்டுத்தீ காரணமாக அங்கு அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கனடாவின் சஸ்காட்சிவான் மற்றும் மனிடோபா மாநிலங்களில் கடந்த சில நாட்களாக பரவி வரும் காட்டுத் தீயானது தற்போது தீவிரமடைந்து வருகின்றது. குறிப்பாக 160 இற்கும் மேற்பட்ட இடங்களில் இக் காட்டுத்தீ பரவி வருவதாக அந் நாட்டு ஊடகங்கள் தெரி வித்துள்ளன.

இதன் காரணமாக, அப் பகுதிகளில் நேற்று முன்தினம் அவசர கால நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதோடு அப் பகுதிகளில் வசித்து வரும் சுமார் 17,000 மக்களை பாதுகாப்பான இடங்களில் நகர்த்தும் முயற்சியில் அந்நாட்டு அரசு தீவிரமாக ஈடுப்ட்டு வரு கின்றது.



இதேவேளை இக்காட்டுத் தீயினால் இதுவரை இருவர் உயிரிழந்துள்ளதுடன் , இலட்சக்கணக்கான உடமைகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அப்பகுதி மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு சஸ்காட்சிவான் மாநில முதலமைச்சர் ஸ்கோட் மோ வலியுறுத்தியுள்ளார்.

அதேசமயம் இக் காட்டுத் தீ காரணமாக அப்பகுதி முழு வதும் புகை மண்டலம் சூழ்ந்துள்ளமையால் அப்பகுதியில் மீட்பு பணிகளை மேற்கொள்வது மிகுந்த சவாலாகக் காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாது இப் புகை மண்டலம் தற்போது அமெரிக்காவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மில்வாக்கீ , சிகாகோ மற்றும் டிட்ரோரைட் போன்ற நகரங்களில் புகை மண்டலம் சூழ்ந்துள்ளமையால் அப் பகுதிகளில் வசித்து வரும் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத் தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடத்தவிருந்த 175 கிலோ ஏலக்காய்

## தமிழக பொலிஸாரால் பறிமுதல்

(சென்னை)

தமிழகத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காக தங்கச்சிமடம் அருகேயுள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 175 கிலோ நிறையுடைய ஏலக்காய் நேற்று வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 175 கிலோ நிறையுடைய 7 ஏலக்காய் மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

தங்கச்சிமடம் பகுதியில் இருந்து இலங்கைக்குப் படகுகள் மூலம் ஏலக்காய், சுக்கு, வெளிநாட்டு சிகரெட் உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், அய்யன் தோப்பு கிராமத்தில் உள்ள வீட்டில் தமிழகப் பொலிஸார் திடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

சோதனையின் போது, இலங்கைக்கு கடத்தும் நோக்கில் ஏலக்காய் மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவை பறிமுதல் செய்யப்பட்டுத் தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தலைமறைவாக உள்ள வீட்டு உரிமையாளரைக் கைது செய்யும் நடவடிக்கையில், தமிழகப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட ஏலக்காய்கள் பின்னர் இராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983- இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி-பா: 14 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Driver(own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15548 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத் திரம்: கார்த்திகை<br>கி-பா- 10 1/4<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: Accountant (GER MAN)<br>எதிர்பார்ப்பு: German, Swiss<br>தொ.இ: G/15557 |
| பிறப்பு: 1992-இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1இல்செவ்<br>கி-பா: 22 1/2<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: BIT, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/15550 | பிறப்பு-1972- இந்து<br>நட்சத் திரம்: சித்திரை<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15561 |
| பிறப்பு: 1991-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>8 இல் செவ்<br>கி-பா-67 1/2<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: IT, Supervisor (சுவிஸ்)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15551 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: Account Course<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு.தொழில்<br>தொ.இ: G/15565 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல் செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, MSc, PHD, Researcher<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/15552 | பிறப்பு -1986 - இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>1இல்செவ்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: BSc, Nurse<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ: G/15568 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>12 இல் சூரிசெவ்<br>கி-பா-11<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BBM, MA<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15554 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 52 1/4<br>1 இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BCom,MBA<br>எதிர்பார்ப்பு: படித்த ஆண்<br>தொ.இ: G/15570 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 384



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## திருமகள் கருணை

காட்டிலே ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். "திடீரென்று ஒருநாள் லட்சுமிதேவி அதாவது திருமகள் அவர் முன்னால் வந்து நின்று காட்சி கொடுத்தார்" முனிவரே, நீங்கள் முன்பு செய்திருக்கிற சில நல்வினை காரணமாக நான் கொஞ்சநாள் உங்களோடு தங்கியிருக்கப்போகிறேன்! என்றார் தாயே! உங்களுடைய கருணையும் அதனால் வருகின்ற செல்வமும் இல்லறத்தில உள்ளவனுக்குத்தானே கிடைக்க வேண்டும் சந்நியாசியான எனக்கு என்னத்துக்கு செல்வம்? என்றார் அந்த முனிவர்.

"முனிவரே, இப்போது உங்களுக்கு செல்வம் வேண்டாம் என்று இருக்கலாம். இருந்தாலும் நீங்கள் முன்பு செய்திருக்கிற புண்ணியத்தின் பயனாகச் சிலகாலம் உங்களோடு நான் இருந்து தான் ஆக வேண்டும். நான் உங்களோடு இருந்தால் எல்லாம் நல்லபடியா முடியும். பயப்படத் தேவையிருக்காது. சகல சக்திகளும் உண்டாகும். ராஜமரியாதைகள் கிடைக்கும். உலகமக்கள் உங்களை மிகவும் மதிப்பார்கள்! என்றார். வேறு வழி இல்லை முனிவர் பேசாமல் இருந்து விட்டார். ஒருநாள் முனிவர் குளித்துவிட்டு வந்துகொண்டிருந்தார் .வழியிலே ஒரு புதையல் கண்ணிலே பட்டது அதுவும் காலடியிலே! அதாவது திருமகள் அருள்.. லட்சுமி கடாட்சம் அவருக்குக் கிடைத்திருக்கிறது என்று அர்த்தம். இருந்தாலும் இவர் எல்லா பாசங்ளைத்துறந்தவர் ! அதனாலே அதை தொடவே இல்லை. பேசாமல் போய்விட்டார். போய் வழக்கம்போல உட்கார்ந்து கொண்டார். அதன் பின்பு யோசித்தார். திருமகள் நம்மோடு தங்கியிருப்பதாக சொல்லியிருக்கிறார், நமக்கு அரச மரியாதை கிடைக்கும் என்று வேறு சொல்லியிருக்கிறார். அதை சோதித்துப்பார்க்கலாம் என்று முடிவுசெய்தார். அருகிலே ராஜசேகரம் என்னும் ஒரு நகரம். அங்கே பராந்தகன் என்று ஒரு ராஜா. இந்த முனிவர் நேரே அந்த ராஜாவிடம் போனார். இவர் வருவதைப் பார்த்ததும் அந்த அரசன் அரியணையிலேயிருந்து எழுந்துவந்து இவரை வணங்கினான். இவர் உடனே அந்த ராஜா தலையிலே இருந்த மகுடத்தைக் காலாலே எட்டி உதைத்தார். லட்சுமிதேவி ராஜ மரியாதை கிடைக்கும் என்று சொன்னரே. அதைச் சோதிப்பதற்காக இப்படி செய்தார் சபையில் உள்ளவர்கள் எல்லாம் பதறிப் போய்விட்டார்கள். உடனே என்ன ஆனது தெரியுமா? மன்னன் பார்த்தான். அந்தக் கீரீடத்துக்குள்ளேயிருந்து ஒரு நாகப்பாம்பு தலையை நீட்டிக்கொண்டு வந்தது.

ஆகா இந்த முனிவர் ஒரு திரிகால ஞானி ஒரு பெரிய ஆபத்திலேயிருந்து நம்மைக் காப்பாற்றியிருக்கிறார் என்று நினைத்து அந்த முனிவர் காலிலே விழுந்து வணங்கினான். இதைப் பார்த்துவிட்டு மற்றவர்களும் வந்து காலிலே விழுந்தார்கள், முனிவரை புஷ்பரதத்திலே ஏற்றி குடை, சாமரம் ஆலவட்டம் இவை மாதிரியான உபசாரங்களோடு ஊர்வலமாக அழைத்துக்கொண்டு வந்தார்கள் . லட்சுமிதேவி சொன்னது மாதிரியே ராஜமரியாதை கிடைத்துவிட்டது. முனிவர் யோசித்தார். மறுபடியும் லட்சுமி கடாட்சத்தை சோதித்துப்பார்க்க விரும்பினார். ஒரு நாள் நடுராத்திரி . அந்தப்புரத்திலே ராஜாவும் ராணியும் தூங்கிக கொண்டிருந்தார்கள் இந்த முனிவர் திடீர் என்று உள்ளே நுழைந்தார். அவர்கள் இரண்டு பேர் முதுகிலேயும் பளார் பளார் என்று நாலு அடி கொடுத்து அவர்கள் இரண்டு பேர் கையையும் பிடித்து தரதரவென்று வெளியிலே இழுத்துக்கொண்டு வந்து வெளியிலே விட்டுவிட்டார். இப்போது எப்படி நமக்கு ராஜ மரியாதை கிடைக்குது பார்ப்போம் என்று நினைத்தார். சிறிது நேரத்திலே அந்தக் கட்டடம் இடிந்து விழுந்தது. அவ்வளவுதான். மறுபடியும் ஓடிவந்து இவர் காலிலே விழுந்தார்கள். அடடா. இந்தக் கட்டடம் இடியப் போகிறதை ஞானக்கண்ணால் பார்த்திருக்காரே. எப்பேற்பட்ட மகான்!" என்றார்கள். அதற்குப்பிறகு அந்த முனிவர் சிறிதுகாலம் ராஜமரியாதையோடு இருந்தார். ஒருநாள இரவு லட்சுமிதேவி முனிவருடைய கனவிலே வந்து, "முனிவரே. நாளை காலையிலே உங்களை விட்டு நான் போய்விடுவேன் இனிமேல் உமக்கு எந்த உபசாரமும் நடக்காது" என்று சொல்லிவிட்டு போய்விட்டார் மறுநாள் விடிந்தது.

முதல்நாள் முனிவர் தன்னிடம் கொடுத்த ஒரு மாம்பழத்தை வெட்டி ஒரு துண்டை வாயிலே போட்டார் மன்னன். உடனே மன்னன் மயங்கி விழுந்தான். அரச வைத்தியர்கள் வந்தார்கள். மாம்பழத்திலே விஷம் கலந்திருக்கிறது என்றார்கள். அந்த பழம் மரத்திலே இருக்கும்போதே நாகம் அதிலே விஷத்தை கக்கியிருந்திருக்கிறது இது தெரியாமல் முனிவர் அதை ராஜாவிடம் கொடுத்திருக்கின்றார். மன்னன் மருந்து சாப்பிட்டு பிழைத்துவிட்டான். இனிமேல் இந்த முனிவர் இங்கே இருக்கிறது நல்லது இல்லை என்றார் மன்னன். காவலர்கள் அவரை அழைத்துக்கொண்டு போய் காட்டிலே விட்டுவிட்டு வந்துவிட்டார்கள். இருபானந்தவாரியார் சொன்ன கதை இது.

திருமகள் கருணை எப்படிப்பட்டது என்பதை விளக்குவதற் காக அவர் இதைச் சொன்னார். இதையே நம்ம பாஷையிலே சொல்லப் போனால் "எல்லாம் ஒரு நேரம் தான்!" என்போம் .நாம் சில சமயம் நல்லது என்று நினைத்துக்கொண்டு செய்வது கெட்டதாக முடியும்! கெட்டது என்று நினைத்துக்கொண்டு செய்வது நல்லதாக முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்கும் முன்னர் எமக்கு நீதியை வழங்குங்கள்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

(வவுனியா)

**சர்வதேசமும் இணைந்தா தமிழினத்திற்கு அநீதி இழைக்கிறது? நீதி பெற்றுக் கொடுக்கப்படாமல் தாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதாக தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நீதி பெற்றுக்கொடுக்கப்படாமல் தொடர்ந்தும் தாம் ஏமாற்றப்பட்டு வருவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவித்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறியாமலேயே அவர்களது உறவினர்கள் பலர் மரணித்துள்ளதாகவும், எனவே எஞ்சியுள்ள தாங்களும் மரணிக்க முன்னர் தமக்கான நீதி கிடைக்க வேண்டும் என்று வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



கொலைக் குற்றங்களைச் செய்த அரச படைகளை விசாரிக்க முடியாதா எனவும் கேள்வியெழுப்பியுள்ளனர்.


அத்துடன் சர்வதேசமும் இணைந்தா தமிழினத்திற்கு அநீதி இழைக்கிறது எனவும் கேள்வியெழுப்பியிருந்தனர்.

எதிர்வரும் ஐ.நா கூட்டத் தொடரிலாவது எமக்கான சர்வதேச நீதிப்பொறிமுறை ஊடான நீதி ஒன்றை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (8-250)

# தேனீக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களை பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நேற்று தேனீக் கொட்டிற்கு இலக்காகி 63 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தேனீக் கொட்டிற்கு இலக்கான ஆசிரியர்கள் மாணவர்களின் நிலைமைகளைப் பார்வையிட்டார்.

அத்தோடு பாடசாலை வளாகத்திலுள்ள தேனீக்கூடுகளை அகற்றாமல் அசமந்தமாகச் செயற்பட்டமைக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினரை நேரடியாகச் சென்று கடுமையாக எச்சரித்ததுடன், பாடசாலை வளாகத்திலுள்ள தேனீக்கூடுகளை உடனடியாக அகற்றுமாறும் உத்தரவிட்டார். (8-299)

# ‘சந்திரன் கிராமம்’ பொதுமக்களிடம் கையளிப்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட “சந்திரன் கிராமம்” வீடு கையளிப்பு நிகழ்வானது கடந்த புதன் கிழமை பி.ப 4 மணியளவில் கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையிலும் இலங்கைக்கான இந்நிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பிரதான பங்களிப்புடன் நடைபெற்றது.

குறித்த சந்திரன் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவினால் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை எடுக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் குஞ்சுப்பரந்தன் முதல் குடமுருட்டி வரையான கரையோரப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களை கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பகுதிகளுக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களிலும் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொது மக்கள் மற்றும் பொது அமைப்புகளால் அமைச்சருக்கு முறைபாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால் பெருமளவான வயல் நிலங்கள், நீர்ப்பாசன கட்டுமானங்கள் என்பன சேதமடைந்து வருகின்றன எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையிலேயே பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட குஞ்சுப்பரந்தன் முதல் குடமுருட்டி வரை மணல்அகழ்வது தொடர்பில் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்து சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (8)

# பலத்த காற்றினால் முறிந்து விழுந்தது மரம்!



(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட அண்ணாநகர் கிராமத்தில் கடும் காற்றினால் வீதியோரமாக நின்ற மரம் முறிந்து வீழ்ந்ததில் வீட்டின் வேலியின் தகரங்கள் சேதமடைந்தமையுடன் மற்றைய வீடு ஒன்றின் பிரதான வாயில் கதவும் சேதமடைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தர்மகுணசிங்கம் சுஜீவன் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் மின்சார சபைக்கு வழங்கிய தகவலையடுத்து மின்சார சபையினர் மின்சார தடையினை நிவர்த்தி செய்தமையுடன் பிரதேச சபையினர் மரத்தினை அகற்றி போக்குவரத்தினையும் சீரமைத்தனர். (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 787





வரவேற்பு முடிந்து வாசலில் நிற்கும் கூட்டம் உள்ளே வருவதற்குள் அவன் தப்பித்துச் செல்லவேண்டும். முற்றத்தில் எப்படி இறங்குவது? ஆ! இதோ ஒரு வழி! இங்கே முற்றத்தில் ஒரு கொட்டகை போட்டிருக்கிறது. குரவைக்கூத்துக்காகப் போட்டிருக்கும் கொட்டகை போலும். கொட்டகைக்காகப் புதைத்திருந்த மூங்கில் மரம் ஒன்று நெடிதுயர்ந்து மேல் மச்சு வரையில் வந்திருந்தது. வந்தியத்தேவன் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு சரசரவென்று கீழே இறங்கினான். மீண்டும் சுற்று முற்றும் பார்த்தான் ஒருவரும் இல்லை. மச்சின் மேலே, தான் சற்று முன் நின்ற இடத்தில் கிண்கிணிச் சத்தம் கேட்டது. ஆகா! மணிமேகலை தன்னைத் தேடி வந்தாள் போலும்! பொல்லாத பெண்! இச்சமயம் அவளிடம் அகப்பட்டுக் கொண்டால் நம்பாடு தீர்ந்தது.

முற்றத்தின் திறந்த வெளியை ஒரே ஓட்டமாக ஓடி வந்தியத்தேவன் கடந்தான், மதில் சுவர் ஓரமாக நின்று திரும்பிப் பார்த்தான், மச்சின் மீது ஒரு பெண் உருவம் தெரிந்தது. மணிமேகலையோ, சந்திரமதியோ தெரியவில்லை. யாராயிருந்தாலும் தான் முற்றத்தை ஓடிக் கடந்ததைப் பார்த்திருக்க வேண்டும். நல்ல வேளையாகக் கூச்சல் போடவில்லை. அவள் யாராயிருந்தாலும் நன்றாயிருக்கட்டும்! மகராசியா இருக்கட்டும்!


இவ்விதம் மனதிற்குள் வாழ்த்திக் கொண்டே மதில் சுவர் ஓரமாக வந்தியத்தேவன் விரைந்து நடந்தான். மதில் மேல் ஆழ்வார்க்கடியானுடைய முகம் தெரிந்த இடம் வந்துவிட்டது. அங்கே சுவரில் ஏறுவது எப்படி? இவ்வளவு உயரமாயிருக்கிறதே! சுவரில் பிடித்துக் கொள்வதற்கு மேடு பள்ளம் ஒன்றுமே இல்லையே? கடவுளே!..இதோ ஒரு உபாயம்! குரவைக்கூத்துக் கொட்டகைக்காகக் கொண்டு வந்த மூங்கில் கழிகள் சில சற்றுத் தூரத்தில் கிடந்தன. அவை மிஞ்சிப் போனவை போலும். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தக் கழிகளில் ஒன்றை எடுத்து வந்தான். மதிலின் பேரில் சாய்த்து வைத்தான். கழியின் உயரத்துக்கும் மதிலின் உயரத்துக்கும் சரியாக இருந்தது. ஆனால் கழி சுவரில் நிலைத்து நிற்க வேண்டுமே? ஏறும்போது நழுவிவிட்டால்? நழுவி விட்டால் கீழே விழ வேண்டியதுதான்! அதற்காகக் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்து என்ன பயன்?

கழியை இரண்டொரு தடவை அழுத்திப் பார்த்துவிட்டு, அதன் வழியாக ஏறத் தொடங்கினான். பாதி சுவர் ஏறியபோது கழி நழுவத் தொடங்கியது. 'தொலைந்தோம்! கீழே விழுந்தால் எலும்பு நொறுங்கிவிடும்!' என்று எண்ணுவதற்குள், கழி, மறுபடியும் உறுதியாக நின்றது. மேலேயிருந்து ஒரு கரம் அதைப் பிடித்துக் கொண்டது போல் தோன்றியது! 'நமக்குப் பைத்தியம் பிடிப்பதுதான் பாக்கி!' என்று எண்ணிக் கொண்டு வந்தியத் தேவன் மேலே ஏறினான். மதில் சுவரின் மேல் முனையை அவன் பிடித்துக் கொண்டதும் கழி நழுவிக் கீழே விழுந்தது. அது விழுந்த சத்தம் இடி முழக்கம் போல் அவன் காதில் விழுந்தது. நல்ல வேளை! கோட்டை வாசலில் ஆரவாரம் இப்போது இன்னும் அதிகமாயிருந்தது.ஆகையால் யார் காதிலும் விழுந்திராது! ஆனால், எதிரே அந்தப்புர மேல் மாடத்தில் நின்ற பெண்! அவள் காதில் விழுந்திருக்கும்

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்

# பெரிய பரிசு



மன்னர் கிருஷ்ணதேவராயருக்குப் பிறந்தநாள் விழா. நகரமெல்லாம் தோரணம், வீடெல்லாம் அலங்காரம்! மக்கள் தங்கள் பிறந்த நாள் போல மன்னரின் பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

முதல்நாள் இரவே வீதிகள் தோறும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், வாண வேடிக்கைகள், அரண்மனையில் வெளிநாடுகளிலிருந்து வந்ததும்அவர்களுக்கு விருந்து தடபுடலாக நடந்தது.

மறுநாள் அரச சபையில் அரசருக்கு மரியாதை செலுத்துதல் நடந்தது, முதலில் வெளிநாடுகளிலிருந்து வந்த அரசப் பிரதானிகள், தங்கள் நாட்டு மன்னர்கள் அனுப்பிய பரிசுகளைத் தந்தனர்.

பிறகு அரசப் பிரதானிகள், பொதுமக்கள், மன்னருக்கு பரிசளித்து மரியாதை செலுத்தினார்கள். அதன்பிறகு அரசரின் நெருங்கிய நண்பர்கள் தங்கள் பரிசுகளை அளித்தனர். அப்போதுதான் பெரியதொரு பொட்டலத்துடன் தெனாலிராமன் உள்ளே நுழைந்தான். அரசர் உட்பட எல்லோரும் வியப்போடு பார்த்தனர்.

மற்றவர்களிடம் பரிசுகளை வாங்கித் தன் அருகே வைத்த மன்னர், தெனாலிராமன் கொண்டு வந்த பரிசுப் பொட்டலம் மிகப் பெரிதாக இருந்ததால் அவையிலுள்ளவர்கள் ஆவலோடு என்ன பரிசு என்று பார்த்ததால் அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும்படி தெனாலிராமனிடம் கூறினார் அரசர்.

தெனாலிராமன் தயங்காமல் பொட்டலத்தைப் பிரித்தான். பிரித்துக் கொண்டே இருந்தான். பிரிக்கப் பிரிக்கத் தாளை மடல்கள் காலடியில் சேர்ந்தனவே தவிர பரிசுப் பொருள் என்னவென்று தெரியவில்லை.

அதனால் எல்லாரும் ஆவலுடன் கவனித்தனர். கடைசியில் மிகச்சிறிய பொட்டலமாக இருந்ததைப் பிரித்தான். அதற்குள் நன்றாகப் பழுத்துக் காய்ந்த புளியம்பழம் ஒன்றிருந்தது. அவையினர் கேலியாகச் சிரித்தனர்.

அரசர் கையமர்த்திச் சிரிப்பு அடங்கியவுடன், "தெனாலிராமன் கொடுத்த பரிசு சிறிதாக இருக்கலாம். அதற்கு அவன் கொடுக்கப் போகும் விளக்கம் பெரிதாக இருக்கலாமல்லவா?" என்று அவையினரைப் பார்த்துக் கூறி விட்டு தெனாலிராமன் பக்கம் திரும்பி, "ராமா இந்த சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்ததின் காரணம் என்ன?" எனக் கேட்டார்.

"அரசே, ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம்பழம் ஒன்றுதான். மன்னராக இருப்பவர் உலகம் என்ற புளிய மரத்தில் காய்க்கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப் போல இனிமையானவராக இருக்க வேண்டும்.

"அதே நேரத்தில் ஆசாபாசங்கள் என்ற புளியம்பழ ஓட்டில் ஒட்டாமலும் இருக்க வேண்டும் என்பதை விளக்கவே இந்த புளியம்பழத்தைப் பரிசாகக் கொண்டு வந்தேன். புளியம்பழமும் ஓடும்போல இருங்கள்!" என்றான்.

அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மன்னர் கண்கள் பனிக்க ஆசனத்தைவிட்டு எழுந்து தெனாலிராமனைத் தழுவி, ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய். ஒரு பிறந்த நாள் விழாவிற்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை.

"பொக்கிஷப் பணமும் பொது மக்கள் பணமும் வீணாகும்படி செய்துவிட்டேன். உடனே விசேடங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்தநாளன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப் பட வேண்டும். அவசியமில்லாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக்கூடாது," என உத்தரவிட்டார். தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் எல்லோரும் பாராட்டினர். அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றை எடுத்து தெனாலிராமனுக்குப் பரிசாகத் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவை எண்ணல் வேண்டும்.
~ பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழல் புரிந்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்

ஊழல் புரிந்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்னாண்டோ ஆகிய இருவரையும் ஊழல் குற்றவாளிகளாக இனங்கண்ட கொழும்பு உயர்நீதிமன்றம் இருவருக்கும் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதிமன்றம் வழங்கிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்ப்பில் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்களும் நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங்களுமாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளன.

இங்குதான் ஓர் உண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது இவ் உலகம் இன்றுபோல் என்றும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

ஆட்சிகள் மாறுகின்றன. காட்சிகள் மாறுகின்றன. ஆட்சிப்பீடத்தில் இருந்த சிலர் சிறைகளில் வாடுகின்றனர்.

இன்னும் சிலர் சுகபோக வாழ்வு வாழலாம் என்று கற்பனை செய்திருந்தனர். ஆனால் அவர்கள் தம் மீதான விளக்கம் விசாரணை எந்நேரமும் வரலாம் என்ற ஏக்கத்தில் தங்கள் வீட்டு நுழைவாயிலைப் பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

அவர்களின் வீடுகளுக்கு வருகின்ற வாகன இரைச்சல்கள் அவர்களைக் கதி கலங்க வைக்கிறது.

ஆம், இங்குதான் நேர்மை என்ற உயர்ந்த ஒழுக்கத்தின் மகிமையையும் முக்கியத்துவத்தையும் இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உண்மை. ஒரு காலத்தில் வாகனங்கள் அணிவகுத்து வர, பயணித்த அந்த அமைச்சர்களுக்கு வீதியெங்கும் வரவேற்பு, மாலை மரியாதை.

அமைச்சர்கள் தமக்குக் கைகாட்டி விட்டால், அதுவே தமக்கான பெரும் செல்வாக்கு என்ற நினைப்போடு இருக்கக்கூடிய ஆதரவாளர்கள். அமைச்சின் அலுவலகங்களுக்குச் செல்லும்போது எல்லோரும் எழுந்து நின்று வழங்குகின்ற மரியாதை.

என்ன செய்வது. எல்லாம் ஒரு கணத்தில் மாறிவிட்டது. இப்போது கையில் விலங்கு. 20, 25 வருட சிறைத் தண்டனை. பொலிஸ் வாகனத்தில் சிறைக்குச் செல்லுகின்ற அந்தப் பொழுதில்; உற்ற உறவுகள் மட்டுமே கண்ணீர் விடுகின்ற காட்சி. வேறு எவரையும் காண முடியவில்லை. இதுதான் நிலைமை.

ஆகையால்தான் நாம் கூறுவது நேர்மை, நீதி, நடுவுநிலை என்ற உயரிய ஒழுக்க விழுமியங்களை எங்கள் வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும்.

அப்போது இந்த உலகம் உங்களை நிச்சயம் மதிக்கும், நேசிக்கும். இதற்கு எந்தப் பதவியும் தேவையில்லை.

ஆக, அறத்தோடு வாழப் பழகிக் கொள்வதுதான் இறைநீதியின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழி.

இது ஒரு புறம் இருக்க, ஊழல் குற்றம் புரிந்த அனைவரும் விசாரிக்கப்பட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இதில் இன, மத, மொழி என்ற பேதம் கடந்து ஊழல் மோசடி செய்த அனைவரும் தண்டனைக்குரியவர்களாக அறிவிக்கப்பட வேண்டும்.

அதுவொன்றுதான் இந்த நாட்டில் நீதியை நிலைநிறுத்தும்.

## தமிழர்களைத் தாயகம் திரும்புமாறு அழைத்த நீங்களே அவர்களைக் கைது செய்வது முறையா?

### அநுர அரசைக் கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்த மனோ எம்.பி

வெளிநாடு சென்ற தமிழர்களைத் திரும்பி "வாங்கோ, வாங்கோ" என நீங்கள் தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி திரும்பி வந்தால் விமான நிலையத்தில் கைது செய்வதா? என அநுர அரசின் இரட்டை நிலைப்பாட்டினை சுட்டிக்காட்டி மனோ கணேசன் எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்கு மேல் வாழ்ந்து நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை யாழ்ப்பாண விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்காமல் தடுத்து வைக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்துள்ள அவர், தனது எக்ஸ் தளப்பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிவலோகநாதனுக்கு நாடு திரும்ப சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் தான் கடவுச்சீட்டு வழங்கியுள்ளது என்பது அரசாங்கத்துக்குத் தெரியாதா? வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியாதா? தமிழக அரசின் பொலிஸ், பாரத மத்திய அரசின் குடிவரவு, குடியகல்வு வாரியம் என்பன ஒப்புதல் அளித்துள்ளன. இதனை அரசு அறியவில்லையா?

ஐ.நா அகதிகள் ஆணைக்குழுதான் சிவலோகநாதனுக்கு பயணச்சீட்டு வாங்கிக் கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விமானமேற்றி அனுப்பி வைத்துள்ளது. இவை உங்களுக்குத் தெரியாதா?

ஊழல் பேர்வழிகளை கைது செய்து சிறையில் அடையுங்கள். அதை செய்யத்தான் வேண்டும். இன்னமும் நானூற்றுக் கணக்கான ஊழல் கோப்புகள் இருப்பதாகச் சொன்னீர்கள். அனைவரையும் கைது செய்து விசாரித்து ஆவன செய்யுங்கள். சட்டத்தில் இடமிருந்தால் ஊழல் பேர்வழிகளுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை வழங்குங்கள்.

அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதை விடுத்து வெளிநாட்டிலுள்ள தமிழர்களை நாட்டுக்கு வரவழைத்து அவர்களைக் கைது செய்வது நியாயமா? எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.(ம-4,7)

### போதைப்பொருள் வியாபாரத்தை அடியோடொழித்து

## எதிர்காலச் சந்ததியினரைப் போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து முற்றாக விடுவிப்போம்

### ஜனாதிபதி அநுர சூளுரை

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன் இணைந்த சட்ட விரோத குற்ற வலையமைப்புக்களை களைந்து எதிர்கால சந்ததியினரை போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து முற்றாக விடுக்கும் பொறுப்பை, உயிரைத்துச்சமாகக் கருதி செய்து முடிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சூளுரைத்துள்ளார்.

நேற்று (30) கல்கிரியாகம, பஹமினியாகம சிறி சமாதி விகாரையின் தாது வளாகம் மற்றும் சிலை திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டதன் பின் இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

அரசியல் அனுசரணையால் உருவாகியிருந்த குற்றங்கள் நிறைந்த நாட்டுக்குப் பதிலாக நல்லதொரு நாடாக சட்டத்தின் ஆட்சி உறுதி செய்யப்பட்ட மற்றும் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக காணப்படும் நாட்டை தற்போது அரசாங்கம் கட்டியெழுப்பியுள்ளது.

இலங்கை இயற்கை வளங்களினால் நிறைந்த தன்னிறைவான நாடாக இருந்த போதிலும் முன்னைய ஆட்சியாளர்களின் திட்டமிடாத செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு அபிவிருத்தி கிட்டாமல் போயுள்ளது.

தற்போதைய அரசாங்கம் படிப்படியாக நிலையானதாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது .

நான் ஒருபோதும் பதவிகளையும் பட்டங்களையும் எதிர்பார்த்து செயலாற்றவில்லை. மக்களின் துயரங்களை உண்மையாகவே கண்ட மற்றும் அனுபவித்த தலைவர் என்ற வகையில் அனைத்து மக்களுக்காகவும் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே அர்ப்பணிப்புடன் பணியாற்றுகிறோம் என்றார். (ம-4,7)

### சட்ட நடவடிக்கையைத் தவிர்க்க

## ரூ.10 ஆயிரம் இனாமாகக் கோரிய பொலிஸ் அதிகாரிக்கு மறியல்

17 வயதுச் சிறுவன் ஒருவன் சாரதி அனுமதி பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் ஓட்டியமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க 10,000 ரூபாய் இலஞ்சமாக கோரியதிருகோணமலை, கிண்ணியாப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினர் இலஞ்ச ஆணைக்குழுவுக்குத் தகவல் தெரிவித்ததையடுத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வேளை அவரை அடுத்த மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-4,7)

## ஆனையிறவு உப்பளத்திற்கு கடற்றொழில் அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலைக்கு திடீர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை நேற்று முன்தினம் மேற் கொண்டார்.

இதன்போது,தொழிற்சாலையை பார்வையிட்டதுடன் குறித்த தொழிற்சாலையில் நிலவி வரும் குறைபாடுகள் தொடர்பில் முகாமையாளரிடம் கேட்டறிந்ததோடு அதனை உடனடியாகத் தீர்க்கும் வகையிலும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அங்கு பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கும் முகமாக தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் இதன் போது மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன் உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர். (8)

## பொம்மைக்குள் போதைவஸ்து நூதனக் கடத்தல் முறியடிப்பு

### விமான நிலைய அதிகாரிகள் அதிரடி

(நீர்கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையமூடாக டெடி பியர் பொம்மைக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து நாட்டுக்குள் கடத்தமுனைந்த பத்து கிலோவிற்கும் அதிகமான கொக்கைன் போதைவஸ்துக்களைக் கைப்பற்றிய அதிகாரிகள் நூதன போதைவஸ்துக் கடத்தலை முறியடித்ததுடன் இத்தாலியப் பிரஜை ஒருவரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க வருகை தரும் முனையத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மற்றும் விமான நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனையிலேயே சந்தேகத்திற்கிடமான குறித்த மூன்று டெடிபியர் பொம்மைகளுக்குள் மறைத்துக் கடத்த முனைந்த 10 கிலோ 323 கிராம் கொக்கைன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைக் கட்டுநாயக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு

13 - 11 - 1953



உதிர்வு

29 - 05 - 2025

## கந்தையா தம்பையா புவனேந்திரன்

### (ஓய்வு நிலை கிராம அலுவலர்)

முதலியார் வளவு வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பையா புவனேந்திரன் 29.05.2025 அன்று வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பையா - மனோன்மணி தம்பதிகளின் செல்வப் புதல்வனும் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும் அஜந்தினி (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம்), ஜனந்தினி(ஆசிரியர், நெல்லியடி மத்திய கல்லூரி), சஜி(ஆசிரியர் யோகபுரம் மகா வித்தியாலயம்), பபிகரன்(லண்டன்), கோபிகரன் (ஆசிரியர்), கிஷோகரன்(பல்கலைக்கழக மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகர் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீடமைப்பு அதிகார சபை), ரதீசன் (கிராம அலுவலர், கரவெட்டிப் பிரதேச செயலகம்), மாதுகி(உதவி ஆணையாளர், காணி உரித்து நிர்ணய திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆதிரன், ஆதுரி, ஆருக்சி, ஆருஜா, விகாஸ், கிவிசா ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான புவனேஸ்வரி, மகேந்திரன், பாலேந்திரன், சிவகாமசுந்தரி, இராஜேந்திரன், இராஜகுலேந்திரன், நரேந்திரன் மற்றும் கமலராணி, இராஜராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 01.06.2025 ஞாயிற்றுக் கிழமை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(C-3085)

## தமிழகத்திலிருந்து...

சட்டப்படி அவர் ஒரு அகதி என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் அவரைப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தினால் ஜூன் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யுத்த காலத்தில் உயிரைக்காத்துக் கொள்வதற்காக குறித்த நபர் தமிழகத்திற்குத் தப்பிச் சென்ற நிலையில் சுமார் 37 ஆண்டுகள் கடந்து நாடு திரும்பிய போது சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய குற்றச் சாட்டின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சின்னையா சிறிலோகநாதன் என்னும் ஏழாலையைச் சேர்ந்த 75 வயது நபர், யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக நேற்று முன்தினம் நாடு திரும்பியபோதே விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற இலட்சக் கணக்கானோர் மத்தியில் இந்த நபரும் படகு மூலம் தமிழகத்திற்குத் தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் தமிழகத்தின் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள முகாமில் தங்கி வாழ்ந்து தற்போது ஏழாலையில் வசிக்கும் தனது மகனுடன் முதுமைக் காலத்தில் வாழ்வதற்காகத் தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான அமைப்பில் (யு.என்.எச்.சி.ஆர்) பதிவு செய்து தாயகம் திரும்பிய போதே நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் இனி வரும் காலத்தில் தாயகம் திரும்பும் அகதிகள் கைது செய்யப்படுவார்களா? என்ற அச்சம் பலர் மத்தியில் எழுப்பப் படுகின்றது. (ம-4,7,33)

## சீரற்ற...

அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி. தர்மதிலக்க தெரிவித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், இந்த 21 மாவட்டங்களில் 219 பிரதேச செயலக பிரிவுகள் அனர்த்த நிலையால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த 219 பிரதேச செயலக பிரிவுகளில் 2,249 குடும்பங்களைச் சேர்ந்த 8,164 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். புயல் காற்று நிலைமைகளால் பெரும்பாலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, மண்சரிவுகளும் பாறைகள் உருண்டு விழுந்தமையும் இதில் அடங்கும். கடந்த 14ஆம் திகதி முதல் நேற்று பிற்பகல் 10 மணி வரை மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த ஒருவருக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்குவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். அதேபோல், 24 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த காயமடைந்தவர்கள் ஏதேனும் ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகினால், அவர்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அதேபோல், இந்த நிலைமையில் முழுமையாக சேதமடைந்த 07 வீடுகள் இதுவரை எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த 07 வீடுகளுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். பகுதியளவு சேதமடைந்த 2,053 வீடுகள் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை மீளமைப்பு செய்து, அதற்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். மேலும், 08 சிறு வியாபாரங்கள் சேதமடைந்துள்ளன.

அதேபோல், 31 உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்துள்ளன. இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே எங்களுக்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

# மரண அறிவித்தல்



மலர்வு
02.06.1940

உதிர்வு
30.05.2025

## திருமதி பரமேஸ்வரி திருவம்பலம்

குருக்கள் மாவடி மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் பிராமணோடை கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி திருவம்பலம் அவர்கள் நேற்று 30.05.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும்(செல்லாச்சியின் வளர்ப்பு மகளும்) காலஞ்சென்றவர்கான வயிரமுத்து - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருவம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும் சிவகுமாரன்(கட்டடக் கலைஞர் - கனடா), சிவபவானி(யாழ்ப்பாணம்), சிவகணநாதன் (மிருசுவில்), சிவயோகநாதன்(கொழும்பு), காலஞ்சென்ற சிவயோகவதி மற்றும் சிவபாக்கியம்(கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவானி(குழந்தைப் பருவ ஆசிரியர் - கனடா), நடராசா(ஓய்வு பெற்ற மருத்துவ ஆய்வுகூட உதவியாளர் - யாழ். போதனா வைத்தியசாலை), நிர்மலா(மிருசுவில்), ராஜேஸ்வரி(கொழும்பு), குமாரசாமி(ஓய்வு பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் - மிருசுவில்), ஜெயச்சந்திரன்(ஓய்வு பெற்ற மருத்துவ ஆய்வுகூட உதவியாளர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும் அனோஜன் - விஷாலி(கனடா), மகதி(கனடா), சுரேகா - பிரதாபன்(லண்டன்), பிரயந்தி - பார்த்தீபன்(வவுனியா), பிரசாந்தன் - சியாமலா(லண்டன்), நிரோஜினி - தினேஸ்பாபு(யாழ்ப்பாணம்), லக்ஷன் - ஈழவாணி(கனடா), லக்ஷி, லதுர்சன்(மிருசுவில்), அபிராமி - பிரதாபன்(கொழும்பு), சௌமியா (கொழும்பு), நிசாந்தன் -டிலானி(சிறுப்பிட்டி), நிரோஜி - யுதர்சன் (மிருசுவில்), லாவண்யா - சுரேன்(லண்டன்), அபிரா - மயூரன்(லண்டன்), மனோஜன், சானுஜன்(கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆதிரன் (கனடா), நமேரா, கஷினா(லண்டன்), கிஷோனா, சஸ்விந்(வவுனியா), தன்விகா (யாழ்ப்பாணம்), ஜஸ்விந், கஸ்விந் (மிருசுவில்), லஷானா, அஜய், ஆதிரன் (சிறுப்பிட்டி), திஸ்விகா(மிருசுவில்), நிவிகா, லித்விகா(லண்டன்), திவிசன், கஜானன், சரவணன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 01.06.2025 மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**077 086 5444**

(4424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாப்பளை...

மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

ஏற்கெனவே நடைபெற்ற முன்னாயத்தக் கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக பொங்கல் விழாவிற்கு வருகை தரும் பக்தர்களிற்கான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு போன்ற விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் நேற்று விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று பிரதேச உதவிச் செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர், பொலிஸார், கடற்படையினர், விமானப் படையினர், இராணுவத்தினர், சுகாதார பரிசோதகர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-7,4,315)

## யாழில் 3 மாதங்...

குறித்த குழந்தை கடந்த 11.02.2025 பிறந்துள்ளது.

இந்நிலையில் குழந்தைக்கு வயிற்றில் கட்டி என்ற காரணத்தால் 07.05.2025 அன்று வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் 3 தடவைகள் குழந்தைக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். கிருமித் தொற்று ஏற்பட்டதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ம-7,4,104)

## கரவெட்டியில்...

வாழ்ந்து வந்தவருமான நந்தகுமார் சாருஜன் (வயது-25) என்ற 5 வயது பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது உயிரிழப்புத் தொடர்பாக கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார்.

(ம-7,4,60)

## ஒட்டுசுட்டானில்...

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய வளாகத்திற்குள் கட்டிடம் ஒன்றில் தேனீக்கள் கூடுகட்டி இருந்துள்ளது.

நேற்று வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற நிலையில் திடீரென தேனீக்கள் கலைந்து பாடசாலை மைதானத்தில் நின்றவர்களை துரத்தி கொட்டியுள்ளது.

இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 63 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-7,4,299)

## காங்கேசன்துறை...

காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்துக்கு வழங்குமாறு முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் திட்டமுன்மொழிவுகள் பற்றிய தெளிவுபடுத்தலிலேயே யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயினும் குறித்த மாளிகை பகுதியளவில் அழிவடைந்துள்ளதாகவும் அதை யாழ்.பல்கலைக்கழகம் நிர்வகிப்பது கடினம் எனவும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

இதனை கூட்டாக மறுத்த பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் ரஜீவன் ஆகியோர் ஜனாதிபதி மாளிகையினை வேறு எந்த நிறுவனத்துக்கும் வழங்குவது பொருத்தமற்ற ஒன்று.

அதனை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வழங்குவதே பொருத்தமானது என உறுதிபடத் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற்குறித்த மாளிகையை பொது மக்கள் பாவனைக்கு வழங்கும் திட்ட முன்மொழிவுகளை தரும்படி ஜனாதிபதி கோரியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(ம-க)

## ஒதுக்கப்பட்ட...

நிய ஆளுநர், நடப்பு ஆண்டின் மே மாதமும் நிறைவுறுகின்றது. மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் - வினைத்திறனாகவும் செலவு செய்யவேண்டும். ஜனாதிபதி மாகாண ஆளுநர்களை அண்மையில் சந்தித்திருந்தார்.

இதன்போது மாகாணங்களுக்கு கடந்த காலத்தைவிட 3 மடங்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளமையைச் சுட்டிக் காட்டியதுடன் ஒரு சதம் நிதியையும் திருப்பி அனுப்பாமல் சரியாகச்செலவுசெய்ய வேண்டும் என்றும் கோரினார்.

எனவே இதனைச் செயற்படுத்த உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பைக் கோருகின்றேன் என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஆளுநர் குறிப்பிட்டதைப் போன்று ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் வினைத்திறனாகவும் செலவு செய்ய அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். மேலும், சில அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

(ம-7,4)

## எதிர்...

கும் இடையே காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காகவே அமைச்சர் யாழ். வருகை தரவுள்ளார்.

(ம-7,4)

## போதைவஸ்துக்களுடன் யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வீடொன்றினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியபோது, 15 கிராம் ஹெரோயின் மற்றும் 2 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டுள்ளதுடன் வீட்டில் இருந்த நபரைச் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் ஏற்கெனவே போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், சுன்னாகம்பகுதியில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை பொலிஸார் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4)


மஹஜன சம்பத — திகதி 2025.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5845 — Z 3 9 1 3 4 7
அத சம்பத — Z 1 3 4 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0420 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1875 — L 30 59 64 72 L — Double Chance 03198

மெகா பவர் — திகதி 30/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2193 — J 19 03 04 49 59

ජය — JAYA — திகதி 2025.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 113 — H 0 1 5 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4087 — சீட்டிழுப்பு திகதி 30.05.2025 — Z 06 08 15 78 — Z — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.05.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1154 — மீனம் 09 40 47 60 மீனம் — 19242 — 38

உத்தியோகபூர்வ முடிவுகள் — 30.05.2025 — 553 — U 4 6 5 0 0 8 — 68532 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,205,736.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2819 — சீட்டிழுப்பு திகதி 2025.05.30 — தினம் வெள்ளிக்கிழமை — 04 43 54 71 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,125,539.20 — DLB

சனிதா — திகதி 30.05.2025 — வெற்றி வாரம் 4980 — 13 30 56 61 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,505,646.40 — 54300 — DLB

சசிரி — 693 — 30.05.2025 — வெள்ளிக்கிழமை — 02 03 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00 — DLB

— சீட்டிழுப்பு வாரம் 4531 — சீட்டிழுப்பு திகதி 30.05.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 39 41 49 50 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,380,753.20 — 193646 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — R 03 36 42 55 56 — 1995 — 30.05.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.576,529,977.60 — DLB

வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2645 — சீட்டிழுப்பு திகதி 2025.05.30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,670,236.00 — ADA KOTIPATHI — 01 10 32 37 C — 691878 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Village Hotel
**Bus Booking** (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
**077 544 8503**
(3992)



## காணி விற்பனைக்கு

அச்செழு தெற்கில் ஆறரை நிலப்பரப்பு (நிலப்பரப்பு 6 ½ ) விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :
**074 251 7329**
(4409)



## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு (வங்கி உத்தியோகத்தர்) யாழ் நகரத்திலிருந்து 3 Km தூரத்திற்குள் வீடு வாடகைக்குத் தேவை.
வீடு நன்றாக பராமரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**075 235 9254**
(1182)



## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**
(1177)



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= Max 3Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 255/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 240/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 215/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 790/= | |
| 1.5 L பெப்சி | - 339/= | ~~400/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~80/=~~ |
| 400g லக்ஸ்பிறே | - 1030 | ~~1100/=~~ |
| 200g சமபோஷ | - 165/= | ~~185~~ |
| 350g கோழி நூடில்ஸ் | - 120/= | ~~200/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~
1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(1187)
Happy Supermarket
0777 8080 30



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 18 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்

- பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
- பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
**076 739 0413, 077 623 4204**
(4423)



உச்சிப் பிள்ளையார் துணை

## தென்னிந்திய யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 18.06.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** உச்சிப்பிள்ளையார் மணக்குள விநாயகர், பிள்ளையார்பட்டி விநாயகர், நவக்கிரக கோயில்கள், சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன், வியாழன், செவ்வாய், ராகு, கேது, சனீஸ்வரன், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம், சமயபுரம், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, ஸ்ரீரங்கம், சாரங்கபானி, ஆதி கும்பேஸ்வரர், திருவெண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல், திருக்கானஸ்திரி, ஏகாம்பரேஸ்வரர், சீர்காழி, வடபழனி முருகன், பஞ்சவடி ஆஞ்சநேயர், கபாலீஸ்வரர், மேல்மருவத்தூர், (மரீனா பீச்) 45 ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

## வட இந்திய யாத்திரை

பத்திரிநாத் தோரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்

**தரிசிக்கும் இடங்கள் :** ஹரித்துவார், ரிசிகேஷ், கங்கோத்திரி, யமுனோத்திரி, உத்திரகாசி, ஸ்ரீரிநாத், கேதாரநாத், சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், இந்திய - சீனா எல்லை

நாட்கள் : 12 ஆரம்பம் : 10.07.2025

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
(1181)

## வட இந்திய யாத்திரை

காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை
நாட்கள் : 10 ஆரம்பம் : 10.08.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** இராமர் கோயில், திருவேணி சங்கமம், காலபைரவர், கங்கா பூஜை, காசியில் 3 நாட்கள், சீரடி பாபா, சனி சிங்னாப்பூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, உத்திரகோசமங்கை, திருபுராணி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை.

**ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 768 0102, 077 736 2154**



# V.S.R Jewellery
## வி.எஸ்.ஆர் ஜுவல்லறி

நகை அடகு பிடிப்பவர்கள்

**1 பவுண் 22 கரட்டிற்கு**
**220,000/=**

வேறு இடங்களில் இருக்கும் அடகு நகைகளை மீட்டு அதிகூடிய பெறுமதிக்கு அடகு வைத்துத் தரப்படும்.

021 716 1213, 077 084 4218
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(4418)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பையா சிவபாதலிங்கம் (ராசா)**

தோற்றம் 02.07.1952 — மறைவு 16.05.2021

ஈரவிழிகளுடன் எம் இதய தெய்வத்தை
எண்ணிப் பார்க்கின்றோம்
இதயங்கள் கனக்கின்றன
எழுத முடியவில்லை
நெஞ்சின் துயரச் சுவடுகளும்
கண்களின் உதிரிப் பூக்களும்
உங்கள் பாதக் கமலங்களை அர்ச்சிக்கின்றன
எங்கள் பாதங்கள் பூமியில் ஈரத்தோடு பதிகின்றன
நீங்கள் என்றும் எங்கள் இதயங்களில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
077 2310434

பிரிவால் துயருறும்
சு. சுந்தரலிங்கம்
(அண்ணா)
(1186)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தா... இல. 101, ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org